ஸ்ரீ:

# திருபவித்ரோத்ஸவ பத்திரிகை

## ஸ்ரீ லக்ஷ்மீநாராயண வரதராஜ பெருமாள் கோவில் தேவஸ்தானம்

பொய்கைப்பாக்கம், விழுப்புரம் – 605 103







இத்திருத்தலத்தின் மங்களாசாஸனம்

கார்வானும் சோலை மலை புல்லாணி மையம்
சீர்வானவர் பரவித்தொழும் காணார்கள் சூழ்ந்த
பொய்கைப் பாக்கம் திகழ் மலரான்
மணவாளன் சரணமடைந்தேனே.

நிகழும் ஸ்ரீ துர்முகி வருஷம் ஆவணி மீ 30உ (15.9.2016) வியாழக்கிழமை காலை 10.45க்கு மேல் விசேஷண ஆராதனைகளும், பன்னிரெண்டு ஆழ்வார்கள் பிரதிஷ்டையும், (செப்டம்பர் 15, 16, 17, 18 தேதிகளில்) திருபவித்ரோத்ஸவமும் நடக்கவிருக்கிறது.

15.9.2016, வியாழக்கிழமை காலை ஆழ்வார்கள் ப்ரதிஷ்டைக்கான யாகசாலை தொடக்கமும், மறுநாள் 16.9.2016 வெள்ளிக்கிழமை காலை பன்னிரெண்டு ஆழ்வார்கள் ப்ரதிஷ்டையும், திருபவித்ரோத்ஸவ யாகசாலை ஹோமங்கள்

தொடங்கி 17.9.2016 சனிக்கிழமையும் தொடர்ந்து 18.9.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று பூர்ணாஹுதியுடன் நிறைவடைய உள்ளது.

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நான்கு தினங்களிலும் ஸேவார்த்திகள் அனைவரும் எழுந்தருளியிருந்து இப்பவித்ரோத்ஸவத்தில் கலந்து கொண்டு எம்பெருமானின் அநுக்ரஹத்திற்கு பாத்திரர்களாகும்படி ப்ரார்த்திக்கிறோம்.

## திருப்பவித்ரோத்ஸவ நிகழ்ச்சி நிரல்

### 15.9.2016 வியாழக்கிழமை யாகசாலை தொடக்கம்

### 16.9.2016 வெள்ளிக்கிழமை

மாலை அங்குரார்ப்பணம், மஹாஸங்கல்பம், அநுக்ஞை, விஷ்வக்ஸேன ஆராதனை, கும்பஸ்தானம், ரக்ஷாபந்தனம், பெருமாள் யாகசாலைக்கு எழுந்தருளுதல், வேத, ப்ரபந்த தொடக்கம், பவித்ர பூஜை திருமஞ்ஜனம், மஹாகும்ப ஸ்தாபனம், பூர்ண ஆஹுதி, அதிவாஸ பவித்ரம் சாற்றுதல், சாற்றுமறை, தீர்த்த ப்ரஸாதம் விநியோகம்.

### 17.9.2016 சனிக்கிழமை

காலை திருமஞ்ஜனம், த்வார பூஜை, மண்டல பூஜை, பிம்ப பூஜை, ஹோமம், பூர்ண ஆஹுதி, சாற்றுமறை, ப்ரஸாத விநியோகம் மாலை சதுஷ்ஸ்தான பூஜை, அர்ச்சனை, ஹோமம், பூர்ண ஆஹுதி, சாற்றுமுறை, ப்ரஸாத விநியோகம்

### 18.9.2016 ஞாயிற்றுக்கிழமை

காலை சதுஷ்ஸ்தான பூஜை, அர்ச்சனை, ஹோமம், பூர்ண ஆஹுதி, விசேஷ ஹோமங்கள், சாந்தி ஹோமம், ப்ராயசித்த ஹோமம், மஹா பூர்ணாஹுதி, பெருமாளுக்கு மண்டல ப்ரஸாதம் ஸமர்ப்பித்தல், பவித்ர விஸர்ஜனம், ஆசார்ய மரியாதை, ஸ்தாபன திருமஞ்ஜனம், யாத்ரா தானம், கும்ப புறப்பாடு, கருவறையில் கும்பத்துடன் பெருமாள் எழுந்தருளுதல், மஹாகும்ப ப்ரோக்ஷணம், திருவாராதனம், நிவேதனம், வேத ப்ரபந்த சாற்றுமுறை, தீர்த்தம், ப்ரஸாத விநியோகம்.

## திருபவித்ரோத்ஸவ ப்ரபாவம்

பவித்ரம் என்னும் வடசொல் "பரிசுத்தம்" என்று பொருள்படும். நூல், பட்டு இவைகளால் செய்யப்பட்ட ஒரு விதமான மாலைக்கும் "பவித்ரம்" என்று பெயர் உண்டு. மேலும் "பவித்ரன்" என்று எம்பெருமானுக்கு ஒரு நாமமுண்டு. இவ்வுத்ஸவம் ஒன்றில் தான் பகவானுடைய மூல, உத்ஸவ விக்ரஹங்களுக்கு விஸேஷமான பவித்ர மாலைகள் ஸமர்ப்பிக்கப் பெறுவன. இதை ஒரு வகை ப்ராயசித்த உத்ஸவம் என்றும் கூறலாம். ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் நடைபெறுகிறது. சுக்லபக்ஷத்தில் குறிப்பிட்ட திதி, நக்ஷத்திரம் கூடிய தினம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. கோவிலுக்கு வருபவர்களுடைய ஆசாரக் குறைவுகள், அசுத்திகள், தீட்டுகள் முதலியவைகளாலும், ஆராதனத்தில் ஏற்படும் தவறுகளாலும் இவை போன்ற இதர காரணங்களாலும், மூர்த்திகள் பகவத் ஸாந்நித்யம், குறைவுபடும். எல்லா தோஷங்களையும் பரிஹரித்து திரும்பவும் வைதீக ஸ்ரீ பரிபூர்ணமாய் ஸித்திக்கும்படி செய்வதே இப்பவித்ரோத்ஸவத்தின் முக்கிய நோக்கம்.

இவ்வுத்ஸவமானது ஒரு மஹாயஜ்ஞம், மண்டலம், கும்பம், குண்டலங்கள் என்று ஸ்தானங்கள் அமைக்கப்படுகின்றன. உத்ஸவ மூர்த்தியை யஜ்ஞசாலைக்கு எழுந்தருளப்பண்ணி அங்கே அவருக்கு திருமஞ்ஜனம் செய்விக்கப்பட வேண்டும். அக்னி ப்ரதிஷ்டை, ஹோமம், வேதபாராயணங்கள் செய்யப்படுகின்றன. பவித்ரங்களை ப்ரோக்ஷித்து, சுத்தம் செய்து, பரிமளம் ஏற்படுத்தி அவற்றிற்கு மந்திராக்ஷதை செய்து, ப்ரணவ மந்திரத்தைக் கொண்டு பகவானுடைய ஆறு கணங்களான ஞான, பல, ஐஸ்வர்ய, வீர்ய, சக்தி, தேஜஸ்களாகிற இவைகளை அவற்றினிடத்தே ஆவிர்பவிர்த்தல் வேண்டும். இப்பவித்ரங்களை பிறகு மந்திரோச்சாடனத்தோடு பெருமாளுக்கு ஸமர்ப்பிக்க வேண்டும். ப்ரதான குண்டத்தில் நவதானியங்கள், புஷ்பம், ப்ரஸாதம், நெய் இவைகளால் ஹோமம் நடக்கும். இந்த ஹோம காலத்தில் பாராயணங்கள் ப்ரபந்த ஸேவை நடக்கும். இன்னும் ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீபாஷ்யம், கீதா பாஷ்யம், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் முதலிய உத்க்ரந்தங்களையும் பண்டிதர்கள் படனம் செய்து கொண்டிருப்பார்கள். ஹோமம் முடிந்த பிறகு நிவேதனமாகி சாற்றுமுறை நடைபெறும். உத்ஸவம் பூர்த்தி ஆகும் பொழுது சாந்தி ஹோமம் நடைபெறும். கடைசி பூர்ண

ஆஹுதியின் போது பட்டு வஸ்திரம், புஷ்ப ஹாரங்கள், தேங்காய், பழங்கள் இவற்றுடன் நெய்யை நிறையச் சேர்த்து ஆஹுதி செய்யும்போது அக்னி ஜ்வாலை வானோங்கி விளங்கும். ஸேவார்த்திகள் அனைவரும் அப்போது அங்குச் சூழ்ந்திருந்து உத்ஸவப் பெருமாளையும், வேதகோஷத்தையும் பெருமாளுடைய ஸேவையையும் அநுபவித்து இன்புறுவார்கள். கடைசியாக மண்டலம் கலைக்கப்பெற்று அதன் மத்தியிலிருந்த சூர்ணம் உத்ஸவமூர்த்தியின் திருவடிகளில் ஸமர்ப்பிக்கப்படும். அடுத்தபடி பெருமாளுக்கு திருமஞ்ஜனம் செய்து வைக்கப்படும். அதற்குப் பிறகு திருபரிவட்டங்களும் புஷ்பமாலைகளும் சாற்றிக்கொண்டு வாத்ய கோஷங்களுடன் பெருமாள் கர்ப்பக்ரஹத்திற்கு எழுந்தருள்வார். அடுத்தபடி கும்ப தீர்த்தத்தால் எல்லா மூர்த்திகளுக்கும் ப்ரோக்ஷணம் நடத்தப்படும். பின்னர் விசேஷ திருவாராதனம், நிவேதனம், சாற்றுமுறைகளுடன் இப்பெரும் உத்ஸவம் பூர்த்தியாகும்.

இம்மஹோத்ஸவத்தில் கலந்து கொள்பவர்கள், பங்கேற்பவர்கள் அனைவரும் ஸகல பாபங்களிலும் விடுபட்டு மிகுந்த ஸ்ரேயஸ்களை அடைவர். இவ்வுத்ஸவம் நடைபெறும் கிராமத்திற்கும், தேசத்திற்கும், அதிவ்ருஷ்டி (கனமழை) அனாவ்ருஷ்டி (மழையின்மை)களால் ஏற்படக்கூடிய பஞ்சம் முதலிய துன்பங்கள் நீங்கி சகல நன்மைகளும் க்ஷேமங்களும் மங்களங்களும் ஏற்படும்.


திரவிய சகாயம் செய்ய விரும்புவர்கள்
தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்

**ஸ்ரீ லக்ஷ்மீநாராயண வரதராஜ பெருமாள் கைங்கர்ய டிரஸ்ட்**

**Plot No. 20, Bharath Street, Balaiya Garden, Madipakkam, Chennai - 600 091.**

**E-mail : sridharanmarch@yahoo.co.in, sridharmarch@gmail.com**

**Website : www.poygaipakkamtemple.com**

**Cell : 93810 36170, 95439 17592, Ph: 044 - 4357 2006**

**V.S. ஸ்ரீதரன்** (காரியதரசி)


*Sudha Art Printers*, Ch-61. ☎: 2267 2107, 2267 3152